RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt224s2265

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# மானுடவியல் நோக்கில் திருமணச் சடங்குமுறை

**சு. பவானி [அ, *], ஜே. அந்தோணி சகாய சோபியா [அ]**

[அ] தமிழ்த்துறை, தூய சவேரியார் தன்னாட்சி கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கலகத்துடன் இணைவு பெற்றது), பாளையங்கோட்டை-627002, தமிழ்நாடு, இந்தியா

# Marriage Rituals in an Anthropological Perspective

**S. Bhavani [a, *], Antony Sahaya Sophia [a]**

[a] Department of Tamil, St. Xavier's College (Autonomous), (Affiliated to Manonmaniam Sundaranar University), Palayamkottai-627002, Tamil Nadu, India

* Corresponding Author: bhavanistx@gmail.com

Received: 21-09-2022
Revised: 17-11-2022
Accepted: 21-11-2022
Published: 05-12-2022

**ABSTRACT**

Literature and anthropology are closely related and anthropology helps us to understand the marriage rituals followed by man in Sangam era. This article explores the marriage rituals that took place in the Sangam era through the very famous Tamil book Ettuthogai. Marriage rituals means the glory of humanity. The purpose of this article is to investigate the marriage rituals in the Ettuthogai, such as Fasting, fixing date, keeping flower, greeting the woman, cooking and feasting. In this article the reason for their marriage ceremony had been viewed from anthropological point on the basis of action-oriented, social relations and community-oriented.

**Keywords:** Ettuthogai, Marriage Rituals, Sangam Era, Anthropology

## முன்னுரை

திருமணச் சடங்கு முறைகள் என்பது மனிதகுலத்திற்கு உரிய பெருமைகள் என்று பொருள்படும். சங்க இலக்கியமான எட்டுத்தொகையில் இடம்பெறும் திருமணச் சடங்கு முறைகளான மங்கலநீராட்டு, சிலம்பு கழி நோன்பு, நன்னாட்குறித்தல், மலரணிதல், பெண்ணை வாழ்த்துதல், பாற்சோறு சமைத்து விருந்தளித்தல் முதலியவற்றில் உள்ள செய்திகளை மானுடவியல் நோக்கில் அதன் பின்னணிகளை இக்கட்டுரையில் ஆராய்வோம். மனிதனின் நடத்தைமுறை பற்றி அறியும் அறிவியல் ஆய்வு மானுடவியலாகும். மனிதனின் நடத்தை முறையில் ஒன்றான திருமணச் சடங்கு முறைகளை கூர்ந்து நோக்கி அறிவியல் முறைகளைக் கொண்டு மனிதனின் திருமணச் சடங்கு முறைக்கான அடிப்படை விதிகளை எடுத்துரைக்கிறது.

மானுடவியல் என்பது மனித இனம் பற்றிய அறிவியல் கல்வித்துறை ஆகும். இது மனிதகுலத்தைச் சமூகநிலை, பண்பாட்டு நிலை, உயிரியல் நிலை போன்ற வேறுபட்ட நிலைகளில் கடந்தகால மக்களையும் சமகால மக்களையும் ஆராயும் பரந்து விரிந்த இலக்குடையதாகும் என்று விக்கிபீடியா விளக்கம் தருகிறது. இதில் மனிதனின் திருமணச் சடங்குமுறை பற்றியும் காரணம் பற்றியும் ஆராய்வதே மானுடவியல் ஆகும்.

## செயல் சார்ந்தவை

சடங்கின் தன்மைகளுள் முதன்மையான கூறு அது. சிந்தனை வழியில் நிலைநிறுத்தப்படாமல் செயல் வடிவத்தில் நிகழ்த்தப்படுவதாகும். சடங்கின் செயல் தன்மையானது நிகழ்த்தப்படுவது என்பது பரவலாக ஏற்கப்பட்ட கருத்தாகும். ஒவ்வொரு சமூகத்தின் மூலவடிவமாக விளங்குவது அச்சமூகத்தினர் கொண்டுள்ள தொன்மங்களாகும். இதனை டைலர் என்பவர்,

"தொன்மத்தை அடியொற்றியே சடங்கு சார்ந்த

நம்பிக்கைகள் வெளிப்படுத்தப்படுகின்றன"

என்று குறிப்பிட்டார் (Bhakthavachala Bharathi, 2008).

சங்க காலத்தில் பழந்தமிழ்ப் பெண்கள் திருமணம் செய்வதற்கு முன் காலில் சிலம்பு அணிகின்ற பழக்கமுடையவராயிருந்தனர். திருமணத்திற்கு முன் சிலம்பினை அகற்றும் சடங்கு பெண் வீட்டியே செய்யப்படுவதாக நடைமுறையாக இருந்தது.

இவை பெண் உடன்போக்கு சென்ற காரணத்தினால் தலைவன் வீட்டிலே சிலம்பு கழிஇ நோன்பு நடைபெறுவதைப் பிறர்கண்டு மகிழ்ந்தார்கள். தான் காணமுடியவில்லை என்று நற்றாய் வருந்துகிறாள்.

"சிலம்பு கழீஇய செல்வம்

பிறருணக் கழிந்த என் ஆயிழை அடியே" (Balasubramaniyan, 2004)

என்ற பாடல் மூலம் சடங்கு செயல்பாடு நிகழ்ந்த பின்னர் செயல்பாட்டை விளக்கும் முகமாக தொன்மமும் அது சார்ந்த நம்பிக்கை வெளிப்படுத்துகின்றன.

## சமூக உறவுகளை வெளிப்படுத்துபவை

குளுக்மேன் என்பார் கருத்துப்படி சடங்கு நிகழ்வென் என்பது நடத்தை முறைகளின் தொகுப்பாகும். இவை மூன்றாக பிரிக்கப்பட்டுள்ளன. அ) சடங்கு செய்பவர், ஆ) சடங்கு பங்கேற்பவர், இ) சடங்குப் பார்வையாளர் இவ்வாறு சடங்கு காலத்தில் வெளிப்படுத்தும் நடத்தை முறைகளில் அவர்கள் இயல்பாகச் சமூக வாழ்வில் கொண்டுள்ள உறவை வெளிப்படுத்துவதாக இருக்கும் என்கிறார்.

### சடங்கு செய்பவர்

தமிழர் திருமண நடைமுறைகளில் பாற்சோறு உண்ணுதல் ஒரு நிகழ்வாக நடைபெறுகிறது. இதனைப் பலர் முன்னிலையில் மணமக்களாகி வாழ்த்து பெற்ற பின்னர் புது மணப்பெண் தன் தலைவனுக்கு பாற்சோறு சமைத்துப் பரிமாறி உண்டனர். தலைவன் பொருள் தேடி வரும்போது அவனுக்கு உணவு சமைத்துப் பரிமாறுவதை தன்னுடைய கடமையாகக் கொண்டு செயல்பட்டாள்.

"புது மணமகடூஉ வயினிய கடிநகர்ப்

பால்கோட்டுடம்பில் பாலுலையிரிஇக்"

கூழைக் கூந்தர் குறுந்தொடிமகளிர் (Jeyabal, 2004)

என்னும் அகநானூற்றுப் பாடல் மூலம் சடங்கு செய்பவர்களின் நடத்தை முறையின் மூலம் தலைவன் தலைவியின் சமூக உறவை வெளிப்படுத்துவதை அறிய முடிகிறது.

### சடங்கு பங்கேற்பவர்

நல்ல நாளில் திருமணம் செய்யும் நடைமுறைத் தமிழரிடையே அன்று முதல் இன்று வரை பின்பற்றப்படுகின்றன.

"அது வரலண்மையோ அரிதேத அவன்மார்

புறுகலவன்ற நானே குறுகி

ஈங்கா கின்ற தோழி"

என்று குறுந்தொகைப் பாடல் வெளிப்படுத்துகிறது (Swaminatha Iyer, 1995).

இதனை இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே திருமணத்தைப் பற்றி பலரறிய வேண்டுமென தீயகோள்கள் தன்னை விட்டு நீங்க பெற்று வளைந்த வெள்ளிய திங்களும் உரோகினியும் கூடிய நாளே திருமணத்திற்கு உகந்த நாளாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

"கணையிருள் அகன்ற கவின்பெறு தூளைக் கோள்

நீங்கிய கொடுவெண் திங்கள்" (Jeyabal, 2004)

என்னும் பாடல் மூலம் இருவீட்டு பெற்றோர்கள் பங்கேற்பாளராக செயல்பட்டு நல்ல நாளினைக் குறிப்பதன் மூலம் அவர்கள் இயல்பாக சமூக வாழ்வில் கொண்டுள்ள உறவினை வெளிப்படுத்துகின்றன.

## சடங்குப் பார்வையாளர்

மங்கல நீராட்டு என்பது திருமணத்துக்கு முன் நடக்கும் சடங்கு முறையாகும். மணப்பருவம் எய்திய மகளிரை நீராட்டுவதாகும். இதில் தலையில் குடத்தையும், மட்பாண்டங்களையும் பொதுப்பணி செய்வதில் முதுபெண்டிர் முன்னரும் பின்னரும் நின்று அவர்கள் கொடுப்பதை வாங்கினர்.

அத்தகைய முதுபெண்டிர் அணிகலன் உடைய மங்கல மகளிர் நால்வர் கூடி நின்று நடத்தும் சடங்கு முறையே மங்கல நீராட்டாகும்.

"உச்சிக்குடத்தர் புத்தகல் மண்டையர்

பொதுசெய் கம்பலை முதும்செம்பெண்டிர்

முன்னவும் பின்னவும் முறை முறைதரத்த

வாலிழை மகளிர் நால்வர் கூடி" (Jeyabal, 2004)

என்னும் அகநானூறு பாடல் மூலம் சடங்கு நிகழ்வில் பங்கேற்பாளராக செயல்பட்ட முதுசெம்பெண்டிர் நால்வர் நடத்தை முறைகளின் மூலம் சமூக உறவு வெளிப்படுத்துவதை அறிய முடிகிறது.

## கூட்டுத்தன்மை வாய்ந்தவை, சமூகம் சார்ந்தவை

சடங்குகள் சில சூழல்களில் தனிமனிதர்களால் நிகழ்த்தப்பட்டாலும் கூட்டுத்தன்மை வாய்ந்தவை, சமூகம் சார்ந்தவையாகும். இதனை லிச் என்பார்

"சடங்குகள் சமூகச் சூழல்களில் நிகழ்த்தப்படுவதும்,

சமூக நிகழ்வுகளாக நிகழ்த்தப்படுவதும், சமூக

பொருண்மைகளாக அமைவதும் என்பது சமூகத்தின்

தொன்மைத் தன்மைகள்" என்கிறார் (Bhakthavachala Bharathi, 2008)

தலைவன் தலைவியின் கூந்தலில் மலரை சூட்டிய பின்பு இருவரையும் வாழ்த்துவதை நடைமுறையாகக் கொண்டிருந்தனர். பெண்ணை வாழ்த்தும் கற்பொழுக்கத்தினின்று சிறிது வழுவாமல் பல பதவிகளையும் செய்து மனைவியாகப் பெற்ற கணவரைப் பெரிதும் விரும்புகின்றனர் என்று மங்கல

நீரோடு மலர்களையும், நெல்லையும் கூந்தலின் மேல்தூவி வாழ்த்தினர் இதனை பெற்றோர்களும் முன்னிலையில் நின்று நடத்தினர்.

"கற்பினின் வாழாஅ நற்பல உதவிப்

பெற்றோர் பெட்கும் புனையாகென

மல்லிருங் கதுப்பின் நெல்லொட தயங்க

வதுவை நன்மணம் கழிந்தவின்னற" (Jeyabal, 2004)

என்னும் பாடல் மூலம் பெண்ணை வாழ்த்துதல் நிகழ்வு சமூக நிகழ்வுகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது. இவை கூட்டுத்தன்மை, சமூகம் சார்ந்தவையாக அமைந்தது. சமூக உறவினைப் புலப்படுத்தும் சடங்கு முறையாக அமைந்துள்ளன.

## முடிவுரை

மானுடவியல் நோக்கில் திருமண சடங்கு முறையில் செயல் சார்ந்த சடங்கு நிகழ்வின் மூலம் அதன் செயல்பாடும் தொன்மம் சார்ந்த நம்பிக்கையும் வெளிப்படுத்துகிறது. இதில் சமூக உறவை வெளிப்படுத்தும் சடங்கு நிகழ்வானது சடங்கு செய்பவர், சடங்கு பங்கேற்பவர், சடங்கு பார்வையாளர் மூன்று பேருக்குமான சமூக சடங்குமுறைகளில் உறவை வெளிப்படுத்துகிறது. சமூக சடங்கு முறையானது கூட்டுத்தன்மை சமூக நிகழ்வுகளாக நிகழ்த்தப்பட்டு கூட்டுத்தன்மை வாய்ந்த சமூக உறவை புலப்படுத்துவதே இதன் முடிவாக அமைகிறது.

## References


Balasubramaniyan, K.V. (2004) Nattirinai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Bhakthavachala Bharathi (2008) Tamizhar Maanidaviyal, Adayalam Publication, Trichy, India

Jeyabal, R. (2004) Agananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Swaminatha Iyer, U.V. (1995) Kurunthogai, Moolamum Uraiyum, Kabir Achu koodam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License